# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590**

<u>ஆணை நாள் 23.09.2019</u>

**<u>முன்னிலை</u>**

## முனைவர் ரா.பிரதாப்குமார்

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண். SA 3301/B/18</u>**

திரு,T.A.ராஜேந்திரன் — மேல்முறையீட்டாளர்

எதிர்

பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம்,
அண்ணாகிராமம்,
கடலூர் மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

## <u>ஆணை</u>

இவ்வாணையத்தால் இன்று (23.09.2019) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு,T.A.ராஜேந்திரன் அவர்கள் ஆஜரானார். பொதுத் தகவல் அலுவலர், திருமதி. ப்பி. மோகனாம்பாள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பஞ்சாயத்துக்கள்), அண்ணாகிராமம் வட்டார வளர்ச்சி அலுவலகம், கடலூர் மாவட்டம் அவர்கள் இன்றைய விசாரணைக்கு ஆஜரானார்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 04.01.2018 தேதியிட்ட மனுவில், திருத்துறையூர் கிராம ஊராட்சியில் 2013 - 2014 ஆம் ஆண்டின் குடிநீர் வரி விதிக்கப்பட்ட நபர்கள் எத்தனை நபர்கள் என்பது குறித்தும், மேற்படி ஆண்டின் தணிக்கைக்கு உட்படுத்தப்பட்ட குடிநீர் வரி கேட்பு பதிவேட்டு ஒளி நகல் தொடர்பாக தகவல் கோரி கடலூர் மாவட்டம், அண்ணா கிராமம் வட்டார வளர்ச்சி (கி.ஊ) அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு மனு செய்துள்ளார்.

3. தமக்கு தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர், தான் கோரியுள்ள தகவல்களை தனக்கு பெற்றுத் தருமாறு தெரிவித்து 26.02.2018 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை கடலூர் மாவட்டம், அண்ணா கிராமம் வட்டார வளர்ச்சி (கி.ஊ) அலுவலக மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பி

வைத்துள்ளார். மேல்முறையீட்டு மனுவிற்குப் பின்னும் தகவல் கிடைக்கப் பெறாததால் மனுதாரர் .05.2018 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (23.09.2019) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், தகவல்கள் மனுதாரருக்கு வழங்கப்பட்டது என்று தெரிவித்து, அதன் நகலை ஆணையத்தில் சார்வு செய்தார். இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர் தனக்கு வழங்கப்பட்ட தகவல்கள் அனைத்தும் பொய்யானது என்றும், தனக்கு தகவல் தராத பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தனக்கு ஏற்பட்ட மனஉலைச்சல் மற்றும் பொருள் விரையத்திற்கு உரிய நஷ்ட ஈடு பெற்றுத் தருமாறும் ஆணையத்தைக் கோரியுள்ளார். மேற்சொன்ன ஆவணங்களை பரிசீலிக்கையில், மனுதாரருக்கு உண்மையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்பது ஊர்ஜிதமாகிறது. மேலும் இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர் 70 வயதில், பொது நோக்கோடு, பொது மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் செயல்படுகிறார் என ஆணையம் கருதி, இன்றைய விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட ஆணைகள் வழங்கப்படுகின்றன:-

1. மனுதாரரின் 04.01.2018 நாளிட்ட 6(1) மனுவிற்கு, 21 மாதங்கள் காலம் கழிந்து முன்னுக்குபின் முரணாக, தவறான, தகவல் வழங்கிய இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் திருமதி. ப்பி. மோகனாம்பாள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பஞ்சாயத்துக்கள்), அண்ணாகிராமம் வட்டார வளர்ச்சி அலுவலகம், கடலூர் மாவட்டம் அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 20(1)ன்கீழ் அதிகபட்ச தண்டமாக ரூ.25,000/- ஏன் விதிக்கக் கூடாது என்பதற்கு அவரது எழுத்து மூலமான விளக்கத்தை இவ்வாணையத்தில் நேரிடையாக ஆஜராகி சமர்ப்பிக்க பொதுத் தகவல் அலுவலர் திருமதி. ப்பி. மோகனாம்பாள், அவர்களுக்கு உத்திரவிடப்படுகிறது.

2. இவ்வாணைகள் கிடைக்கப் பெற்ற 10 தினங்களுக்குள் மனுதாரர் கோரியுள்ள இனங்களுக்கான தகவலை, உண்மையாகவும், முழுமையாகவும் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி ஒப்புகைச் சீட்டுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு அனுப்பி வைத்து, அவர் ஏற்பளிப்பு செய்த நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலை இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்திரவிடுகிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 3301/B/18</u>**
பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம்,
அண்ணாகிராமம்,
கடலூர் மாவட்டம்.

திரு,T.A.ராஜேந்திரன்,
எண்.205, மெயின்ரோடு,
திருத்துறையூர் அஞ்சல்,
பண்ருட்டி வட்டம், கடலூர் மாவட்டம் - 607 205

Copy to: File / Stock File
SC/PA/24.09.2019